செ.வெ.எண்: 35 நாள்: 14.04.2017

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (டிஜீ ___ தன்) திட்டத்தின் 100 நாட்கள் நிறைவு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வங்கியாளர்களுக்கு விருதுகள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மின்னணு முறையில் பணப்பரிமாற்றம் (டிஜீ ___ தன்) திட்டத்தின் 100 நாட்கள் நிறைவு விழா இன்று (14.04.2017) நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு மின்னணு பணப்பரிமாற்றம் குறித்த வினாடி வினா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ்களையும் மின்னணு பரிமாற்ற முறை குறித்த விழிப்புணர்வு பணிகளை சிறப்பாக செய்த நிதிசார் கல்வி மைய ஆலோசகர்களுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ்களையும், வங்கியாளர்கள் மூலம் வாடிக்கையாளர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு மின்னணு பண பரிவர்த்தனை உபகரணங்கள் மற்றும் ரூபே கார்டுகளையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

மேலும் வருவாய்துறையின் மூலம் நலிந்தோர் உதவித் தொகை தலா ரூ.20,000 வீதம் 7 நபர்களுக்கும், 3 நபர்களுக்கு முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித் தொகை வழங்குவதற்கான உத்தரவினையும், உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை 5 நபர்களுக்கும், திருமண உதவித் தொகை 5 நபர்களுக்கும், வீட்டுமனை பட்டா 19 நபர்களுக்கும் என 39 நபர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

பின்னர் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் நாக்பூரில் பாபா சாகிப் அம்பேத்கர் அவர்களின் 127 வது பிறந்த நாள் மற்றும் (டிஜீ ___ தன்) திட்டத்தின் 100 நாள் நிறைவு நாள் விழாவில் உரையாற்றிய நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. மாண்புமிகு பாரதபிரதமர் அவர்கள் பேசியதாவது: - மேலை நாடுகளை காட்டிலும் மின்னணு பண பரிமாற்ற வசதி இந்திய வங்கிகளில் கூடுதலாக உள்ளது. ஏழை எளிய மக்கள் பயன் பெறும் வகையில் கைரேகை வைத்து ஆதார் எண் மூலம் மின்னணு பணபரிமாற்றம் செய்திட (பீம் ஆதார்) திட்டம் அதிக அளவில் செயல்படுத்தப்படவுள்ளது. இதை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் பீம் அப்ளிகேசனை பதிவிறக்கம் செய்திட உதவிடும் இளைஞர்களுக்கு ஒரு டவுன்லோடிற்க்கு ரூ.10 ஊக்கத் தொகையாக கிடைக்கும், வியாபாரிகளுக்கு ரூ.25 ஊக்கத் தொகையாக கிடைக்கும். இத்திட்டம் 14.10.2017 வரை 6 மாத காலம் செயல்படுத்தப்படும். மின்னணு பணப்பரிமாற்றம் அதிக அளவில் பயன்படுத்தும் போது இந்திய பொருளாதார வளர்ச்சி பெற்று 2022 ல் வருமையில்லா இந்தியா உருவாக்கும் இலக்கினை எளிதாக அடைந்திட முடியும் - என பேசினார்.

இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மண்டல மேலாளர் திரு.மொஹந்தா, நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் திரு.ராமலிங்கம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாள் (பொது) திரு.ராமசுப்பிரமணியன், சமூக பாதுகாப்பு திட்ட தனித் துணை ஆட்சியர் திருமதி.விஜயலட்சுமி, பாரதபிரதமர் அலுவலக பிரிவு அலுவலர்கள் திரு.விவேக் திரிவேதி, திரு.சோனு குமார், திரு.எம்.எல்.திவாரி, மாவட்ட முதன்மை வங்கி மேலாளர் திரு.அழகர்சாமி, மற்றும் வங்கியாளர்கள், வியாபாரிகள், வாடிக்கையாளர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.